தினப்புயல்
PIN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், நிகழ்நிலை காப்பு சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம்

மட்டக்களப்பில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், நிகழ்நிலை காப்பு சட்டம் ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு பேரணியும் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகிலிருந்து பேரணியானது ஆரம்பமாகி காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் ஞாபகார்த்த இடம் வரையில் வருகைதந்து அங்கு எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சிவில் சமூகம் என்ற அமைப்பின் ஊடாக இலங்கை அரசானது உடனடியாக அடக்குமுறை சட்டங்களை மீளப்பெறவேண்டும் என்ற தொனிப்பொருளில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிழக்கு மாகாண சிவில் சமூகம் சார்பாக முகமட் புஹாரி தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் பெருமளவான பொதுமக்கள் கலந்துகொண்டு பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பேரணி சென்றது.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட முன்மொழிவை மீளப்பெறு. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டும். தகவலை அனுகுவதும் கருத்துச்சுதந்திரமும் எங்களது அடிப்படை உரிமை. ஊடகத்திற்கு சுதந்திரம் மற்றும் சுயாதீனம் வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குடிமக்களின் உரிமைகளை பாதுகாக்க சட்டங்களை உருவாக்குங்கள். அவர்களை ஒடுக்குவதற்கு அல்ல போன்றபல்வேறு கோசங்களுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் முன்னாள் பிரதேச மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை நாட்டு மக்கள் பாரியதொரு சவாலான சூழலை கடந்து தங்களது பொருளாதார மற்றும் சமூக வாழ்வை நோக்கி பயணிக்க தொடங்கியுள்ள இக்கால பகுதியில் அரசானது அவர்கள் மீது ஈடுகொடுக்க முடியாத பாரிய ஒரு பொருளாதார சுமைகளையும், வாழ்க்கை செலவீனங்களையும், வரிச் சுமைகளையும் சுமத்தியுள்ளதோடு அரசிடம் இருந்து பாதிப்புற்ற மக்களுக்கு பெறக்கூடிய சமூக நலத்திட்டங்களையும் இல்லாது செய்வது அரசு மக்களுக்கு செய்கின்ற பாரியதொரு அநீதியும் உரிமை மீறலும் ஆகும்.

தற்போது அரசு சர்வதேச சமூகம் அல்லது நிதி நிறுவனங்களிடம் செய்துகொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதை நோக்காகக்கொண்டு செயல்படுவது மக்களுடைய வாழ்வியலையும் பொருளாதார நிலைமையையும் கேள்விக்குறியாக்கி உள்ளாக்குகின்றன. இவற்றை எதிர்த்து மக்கள் போராட்டங்களையும் அரசை நோக்கி எழுப்புகின்ற கேள்விகளையும் அடக்குவதற்கான செயல்பாடுகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்கின்றார்கள் என்பதனை மக்களாகிய நாம் நன்கு அறிந்துள்ளோம்.

குறிப்பாக கடந்த காலங்களில் மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் முடக்கப்பட்டு போராடியவர்கள் மீது அரச படையினர்கள் மேற்கொண்ட தாக்குதல்கள் அதே போன்று பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வு மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை குறிப்பிடலாம். அதேபோன்று எதிர்வரும் காலங்களில் அரசினுடைய முடிவுகளுக்கு திட்டங்களுக்கும் மக்களால் மேற்கொள்ளப்படும் கேள்விகளையும் போராட்டங்களையும் கட்டுப்படுத்தும் நோக்கிலே அரசானது பல்வேறுபட்ட அடக்குமுறை சட்ட வரைவுகளை முன்மொழிந்து அதனை பாராளுமன்றத்தின் ஊடாக சட்டமாக்கி மக்களினுடைய அடிப்படை கருத்து சுதந்திரத்தினையும் ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தினையும் இல்லாது செய்வதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்ட வரைவுகளை முன்மொழியப்பட்டிருகின்றன.

அத்தோடு இச்சட்டங்கள் முற்று முழுதாக தகவல்களை அனுகுவதையும் கருத்து தெரிவிப்பதையும் ஊடக சுதந்திரத்தையும் இல்லாது செய்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆகவே இது ஒரு ஜனநாயக விழுமியத்தை மீறுகின்ற செயலாகும். ஆகையில் இலங்கை அரசு முன்மொழிந்திருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் நிகழ்நிலை அடக்குமுறை சட்ட வரைவுகளை உடனடியாக மீளப்பெறவேண்டும்.




## பேச்சுவார்த்தைக்கு இடமில்லை - இஸ்ரேல் அறிவிப்பு



இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த சனிக்கிழமை ஆயிரக்கணக்கான ஏவுகணைகளை அடுத்தடுத்து ஏவி, அதிரடியாக தாக்குதல்களை நடத்தியது. இஸ்ரேலில் நடந்த இந்த ஏவுகணை தாக்குதலில் பெண்கள், முதியவர்கள் என நூற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டும் உள்ளனர்.

இஸ்ரேலும், படைகளை குவித்து பதிலடி கொடுத்து வருகிறது. இந்த போரில் இரு தரப்பிலும் 1,200 பேர் பலியாகி உள்ளனர். பாலஸ்தீனிய குழுவினரை தோற்கடிப்போம் என இஸ்ரேல் அரசு உறுதி பூண்டுள்ளது. இதற்காக காசா முனை பகுதியருகே ஆயிரக்கணக்கான படை வீரர்களை அனுப்பி வைத்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் லையர் ஹையாத் கூறும்போது, இந்த முறை யாரிடமும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. நாங்கள் போரில் இருக்கிறோம். அதனால், பேச்சுவார்த்தைக்கோ அல்லது மத்தியஸ்தம் செய்வதற்கோ உரிய தருணம் இது இல்லை. நாங்கள் இன்னும் எங்களுடைய எல்லை பகுதியை பாதுகாக்க முயற்சித்து வருகிறோம். இஸ்ரேலிய எல்லை பகுதியில் ஹமாஸ் பயங்கரவாதிகள் யாரேனும் இருக்கிறார்களா என கண்டறியும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இந்த பகுதியில் காயத்துடன் இருப்பவர்களை கண்டறியும் பணியிலும் ஈடுபட்டு உள்ளோம் என கூறியுள்ளார்.

காசாவை உங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் எடுத்து கொள்ளும் சாத்தியம் பற்றிய பரிசீலனை எதுவும் உண்டா? என கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த ஹையத், நான் பல விவரங்களுக்குள் செல்லமாட்டேன். இஸ்ரேல் அரசு மற்றும் பாதுகாப்பு படையானது, பாதுகாப்பை மீண்டும் கொண்டு வர என்ன செய்ய வேண்டுமோ அவற்றை செய்யும். இஸ்ரேல் குடிமக்களை தாக்கும் இந்த திறனை ஹமாஸ் பயங்கரவாதிகள் கொண்டிருப்பதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்று அவர் கூறியுள்ளார்."

## மழைக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்



தற்போது நிலவும் மழையுடனான வானிலை காரணமாக தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. எனவே குடிநீர் ஆதாரங்களில் அழுக்கு நீர் கலந்துள்ளதால், கொதித்தாரிய நீரை அருந்துவது மிகவும் ஏற்றது என பிரதி சுகாதாரப் சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் கலாநிதி ஜி.விஜேசூரிய தெரிவித்தார்.

கீரை வகைகள், பச்சை மரக்கறிகள், பழங்கள் போன்றவற்றை உண்பதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உணவு பாதுகாப்பாக இல்லாவிட்டால் வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் ஏற்படக்கூடும் என எச்சரித்தார்.

இதேவேளை, இடைதங்கல் முகாம்களில் உள்ளவர்கள் இடையே சின்னம்மை, கண் நோய்கள், சுவாச நோய்கள் போன்றவை பரவக்கூடும் என்பதால் அறிகுறிகள் தென்பட்டவுடன் மருத்துவ ஆலோசனையை பெறுமாறு சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

## பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அறிவிப்பு




2023 ஆம் ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு கிளாடியா கோல்டினுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான தொழில் வாய்ப்புகள் தொடர்பான ஆய்வுகளுக்காகவும், பாலின இடைவெளியின் முக்கிய ஆதாரங்களை ஆய்வில் வெளிப்படுத்தியமைக்காகவும் கிளாடியா கோல்டினுக்கு இந்த நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

சுவீடன் நாட்டை சேர்ந்த ஆல்பிரட் நோபல் எனும் வேதியியல் பொறியாளரின் பெயரால் 1901 இல் இருந்து மருத்துவம், பௌதீகம், வேதியியல், இலக்கியம் மற்றும் உலக அமைதி ஆகிய 5 துறைகளில் மனித குலத்திற்கு பயனுள்ள சாதனைகளை புரிந்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு எனும் உலக புகழ் பெற்ற விருது வழங்கப்படுகிறது.

## இன்று மோதலில் இலங்கை – பாகிஸ்தான்




உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் Dasun Shanaka தலைமையிலான இலங்கை அணி, Babar Azam தலைமையிலான பாகிஸ்தான் அணியை எதிர்த்து இன்று (10) எதிர்கொள்ளவுள்ளது.

இந்த போட்டி ஹைதராபாத் மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. உலகக் கிண்ண முதலாவது போட்டியில் இலங்கை போராடி தோற்றது. இதனை அடுத்து இந்த போட்டியில் வெற்றி பெறும் நோக்குடன் களமிறங்குகிறது இலங்கை அணி.

அத்துடன் பாகிஸ்தான், நெதர்லாந்து அணியுடனான தனது முதலாவது வெற்றியினை தொடர்ந்து இன்று இலங்கையுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வட மாகாணத்தில் சூரிய சக்தி மின் அமைப்பு

தேசிய மின்சார அமைப்பிற்கு தினமும் 6.5% புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் சூரிய சக்தி மின் அமைப்பு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும் என கூறப்படுகின்றது.

தனியார் சூரியப்படல நிறுவனம் ஒன்றின் தலைவர் ஜயந்த சமரகோன் தெரிவிக்கையில், வட மாகாணத்தில் பூநகரி ஏரியை அண்மித்த பகுதிகளில் 6000 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

1000 ஏக்கரில் 700 மெகாவோல்ட் சூரிய சக்தி மின் அமைப்பு நிறுவப்படும். மேலும் சூரிய சக்தி மின் அமைப்பு அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பூநகரி ஏரியை முழுமையாக அபிவிருத்தி செய்து அப்பிரதேசத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் வகையில் விவசாயிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனம் 5 பில்லியன் ரூபாவினை செலவழிக்க உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத புதுப்பிக்கத்தக்க மின்சாரம் தேசிய மின்சார அமைப்பில் சேர்க்கப்படுவதால் அப்பகுதி விவசாயிகள் பயனடைவார்கள்.

இது தொடர்பான திட்ட மீளாய்வு கூட்டம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் நேற்று 09 இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் நீர்ப்பாசன திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களம், மின்சார சபை, விவசாய திணைக்களம் ஆகியவற்றை சேர்ந்த அதிகாரிகளும் மற்றும் பல அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.




## இந்தியா - இலங்கைக்கு இடையிலான கப்பல் சேவை பிற்போடப்பட்டது



இந்தியா - இலங்கைக்கு இடையிலான கப்பல் சேவை இன்று ஆரம்பமாகவிருந்த நிலையில் திடீரென பிற்போடப்பட்டுள்ளது.

இந்தியாவின் தமிழகம் நாகப்பட்டினம் - இலங்கையின் காங்கேசன்துறைக்கு இடையிலான செரியாபாணி என்ற பெயரைக் கொண்ட பயணிகள் கப்பல் சேவை இன்று (10) ஆரம்பமாகவிருந்த நிலையில் தொழிநுட்ப ரீதியான தடங்கல்கள் காரணமாக எதிர்வரும் 12ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

செரியாபாணி கப்பலின் பரீட்சார்த்த நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தது. எனினும் தொழிநுட்ப ரீதியான தடங்கல்கள் காரணமாக சேவைகள் நிறுத்தப்படுவதாக நேற்று மாலை அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு



உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 600,000 பெறுமதியான மானிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட முகாமையாளர் ஏ.பி.இராங்கனி அவர்களும், விசேட அதிதிகளாக சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃப்பிகா, தேசிய வீடமைப்பு அதிகார சபை பொறியியலாளர் ஏ.சி.எம்.பாஹிம், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், வீடமைப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம்.முஸாக்கீர், கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்துகொண்டனர்.
(நூருல் ஹுதா உமர்)

## சர்வதேச அளவில் சாதித்த கால்தீன் பாத்திமா லனாவுக்கு பாராட்டு



சம்மாந்துறை கல்வி வலய நாவிதன்வெளி சாளம்பைக்கேணி கமு / சது / அல் - சிராஜ் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) தரம் 09 இல் கல்வி பயிலும் மாணவி கால்தீன் பாத்திமா லனா சர்வதேச அபாகஸ் போட்டியில் முதலிடம் பெற்றமையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று நேற்று (09) பாடசாலை அதிபர் எஸ்.எம்.எம்.யூசுப் தலைமையில் நடைபெற்றது.

அல் - மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் "திறமையானவர்களை தேடி வாழ்த்துதல்" வேலைத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல் - மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என்.ஹுதா உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சர்வதேச சாதனை மாணவி லானாவை பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம், பதக்கம், சான்றிதழ், பரிசில்கள் போன்றன வழங்கி கௌரவித்தார்.

நகருக்கு தொலைவில் உள்ள கிராமத்தவர்கள் சாதிக்க தகுதியற்றவர்கள் என்ற சிந்தனையை உடைத்து சர்வதேச அரங்கில் தனது ஊருக்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்த மாணவியை கிழக்கு மண்ணின் மகளாக போற்றி கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைவதாகவும், இதுபோன்ற பல சாதனையாளர்களை ஆசிரியர்கள் இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் அடையாளப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாகவும், சாதனையாளர்களை தூக்கிவிட எப்போதும் மீஸான் பௌண்டேஷன் தயாராக இருப்பதாகவும், சாதனையாளர்களுக்கு ஒழுக்கம் கட்டாயம் அவசியமாக இருப்பதுவும் அவசியம் எனவும் இங்கு உரை நிகழ்த்திய கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல் - மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என்.ஹுதா உமர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அல் - மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா பிரதிப் பொது செயலாளர் டப்லியூ.ஷஃத் உஸைம், விருதுகள் மற்றும் திறமையானவர்களை தேடி வாழ்த்துதல் பிரிவின் பணிப்பாளர் ஜே.எம்.ஃஸான், அல் - மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா இளைஞர் பிரிவின் நிர்வாகிகளான ஜே.எம்.பாஸித், கே.எம்.ருஸ்தி, பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாத்திமா லானாவின் பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.